

# අතිගරු ජනාධිපති උතුමාණෝ

## ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය

# மேன்மை தங்கிய சனாதிபதி அவர்கள்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

මහා බ්‍රිතාන්‍ය සහ උතුරු අයර්ලන්ත එක්සත් රාජධානියේ
අග්‍රාමාත්‍ය තැන්පත්

රාජකීය සංගමයේ අධිසාමාජිකා සහ පාර්ලිමේන්තු මන්ත්‍රිනී

# මහාමාත්‍ය මාගරට් තැචර් උතුමිය

සහ

බ්‍රිතාන්‍ය අධිරාජ්‍යයේ සාමාජික නාමධාරී

# ඩෙනිස් තැචර් මැතිතුමාට

ගෞරව කිරීම සඳහා

**1985 අප්‍රේල් 12 වෙනි දින**

කොළඹ ජනාධිපති මන්දිරයේදී පවත්වන ලද

# රාත්‍රී භෝජන සංග්‍රහයේදී

ශ්‍රී. ල. ප්‍ර. ස. ජනරජයේ ජනාධිපති අතිගරු

# ජේ. ආර්. ජයවර්ධන උතුමානන් විසින්

පවත්වන ලද දේශණය

| | |
|---|---|
| පරි. අංක | 6571 |
| වර්ග | 808.51 |
| දිනය | |

*අතිගරු අගමැතිතියනි, නැවර් මහතාණනි,*
*නානාපතිවරුනි, මහත්මාවෙනි, මහත්වරුනි,*

මෙහි පැමිණෙන ලෙස මම ඔබට කළ ආරාධනය පිළිගැනීම ගැන මගේ ආණ්ඩුව සහ මා ද අපේ ජනතාවගෙන් වැඩි දෙනෙකුත් සතුටුවීමට හේතු රාශියක් තිබේ.

අගමැතිතියනි, අපේ ජාතීන් දෙක අතර පවතින ශක්තිමත් බැඳීම් අප සබඳකම් පැවැත්වූ ශතවර්ෂ දෙකකට වැඩි කාලයක් තුළ ඇති වූ ඒවා යි. ලන්දේසීන්ට අයිතිව තිබූ ශ්‍රී ලංකාවේ මුහුදුබඩ පළාත් තමන් වෙත පවරා ගැනීමට බ්‍රිතාන්‍ය ආණ්ඩුවේ නියෝජිතයින් තීරණය කළ 1796 වර්ෂය තරම් ඈත කලක සිට ඒ බැඳීම් පවතී. අපේ දිවයින් ජාතීන් දෙකෙහි දෛවය එදා සිට ඉතා තදින් එකිනෙකට වෙළී ඇත.

ශ්‍රී ලංකාවෙහි අද පවතින ජන ජීවිතයේ බොහෝ අංශයන් මෙම සබඳතාවය නිසා හැඩගැසුනු ඒවායි. මේවායින් මුල්තැන ගත්තේ අප ආඩම්බර වන අපේ ප්‍රජාතන්ත්‍රවාදී සම්ප්‍රදායයන් ය.

ජූරිය මගින් නඩු ඇසීමේ ක්‍රමය 1833 දී ආරම්භ විය. මහජනයා විසින් පත්කළ මන්ත්‍රීවරුන්ගෙන් යුක්තව, කොළඹ, මහනුවර සහ ගාල්ලේ මහ නගර සභා 1866 දී ඇති කරන ලදී

ආසයාවෙ මුල්ම එවැනි ආයතන වූයේ ඒවා යි. සර්වජන ඡන්දයෙන් පත් කළ මන්ත්‍රීවරුන්ගෙන් තෝරාගත් ඇමතිවරුන් සහිත රාජ්‍ය මන්ත්‍රණ සභාව 1931 දී පිහිටුවන ලද අතර එය 1947 දී නිදහස ලැබෙන තුරු ක්‍රියාත්මක විය. හිටපු අගමැතිවරයෙක් ද වූ පාර්ලිමේන්තු මන්ත්‍රී දහනායක මහතාත් මාත් පමණයි එම රාජ්‍ය මන්ත්‍රණ සභාවේ සිටි මන්ත්‍රීවරුන්ගෙන් අද ජීවතුන් අතර සිටින්නේ.

අපේ නායකයින් අපි තෝරා ගත්තේ ඡන්දයෙනි. 1931 ට පසු මහා මැතිවරණ දහයකුත් ජනමත විචාරණයකුත් මේ රටේ පැවැත්විනි. ජනමත විචාරණයේ දී ජනතාව සියයට පණස් තුනක ඡන්දයෙන් මහ මැතිවරණය 1989 වන තෙක් කල් දැමීමට තීරණය කළහ. මහ මැතිවරණයක් හෝ ජනාධිපතිවරණයක් කල් දැමීමට තුනෙන් දෙකක වැඩි ඡන්දයකින් වුවද පාර්ලිමේන්තුවට හැකියාවක් නොමැත. කිහිප අවස්ථාවකදීම ජනතාව විසින් ආණ්ඩු පත් කොට පරාජය කොට ඇත. මේ මැතිවරණ සටන්වලට මා ද මුහුණ දී ඇති අතර එවැනි අත්දැකීම් ඇත්තේ අද ජීවතුන් අතර සිටින ප්‍රජාතන්ත්‍රවාදී නායකයින්ගෙන් ස්වල්ප දෙනෙකුට පමණකි.

පවත්නා ක්‍රමයන් වෙනස් කිරීම සඳහා ප්‍රචණ්ඩ ක්‍රියාවන් උපයෝගී කර නොගැනීමට අපේ ඇති අධිෂ්ඨානය ශතවර්ෂ 25 ක් පැරණි අපේ බෞද්ධ සම්ප්‍රදායයන් ගෙන් වඩාත් ශක්තිමත් වෙයි. පාලිතයන්ගේ කැමැත්ත ඇතිව පාලනය කිරීමේ ක්‍රියාමාර්ගය, අපේ ජනතාවට මග පෙන්වනු ලබන්නාවූ ද දීර්ඝ කාලයක් තිස්සේ අඛණ්ඩව පැවතෙන්නාවූද, දර්ශණික සම්ප්‍රදායයන්ට ද සම්පූර්ණයෙන්ම අනුකූල වෙයි. බුදුරජාණන් වහන්සේ වැඩ විසූ, දහම් දෙසූ, ඉන්දු ගංගා නිම්නයේ රාජ්‍යයන්ගේ සමහර ජනතාවන් අතර, ක්‍රිස්තු වර්ෂයට පෙර 6 වැනි සියවසෙහි, පැවතියාවූ සම්ප්‍රදායයන් අනුගමනය කරමින් අවුරුදු සිය ගණනකට පෙර ශ්‍රී ලංකාවේ ද ප්‍රජාතාන්ත්‍රික ආයතනයන් ඉතාමත් මූලික මට්ටමෙහි ප්‍රචලිතව

තිබීම ගැන අපි ආඩම්බර වෙමු. භෞතික විද්‍යාවෙහි සහ දර්ශන වාදයෙහි නව සංකල්පයන් දේශනා කරමින්, සොක්‍රටීස්, ඇරිස්ටෝටල්, ප්ලේටෝ සහ ඔවුන්ගේ සමකාලිකයින් අපරදිග රටවල ද සොරොස්ටර් පර්සියාවේ ද, ගෞතම බුදුරජාණන් වහන්සේ ඉන්දියාවේ ද කොන්ෆියුසියස් චීනයේ ද ජීවත් වූ මෙම වකවානුව මානව ඉතිහාසයේ යොවුන් විය හැටියට එච්. ජී. වෙල්ස් විසින් හඳුන්වනු ලබයි.

පෞද්ගලික නිදහස හබයාස් කෝපුස් ආඥාව, භාෂණයේ සහ සමාගමයේ නිදහස සහ ඡන්දබලය පාවිච්චි කිරීමට ඇති අයිතිවාසිකම වැනි ප්‍රජාතාන්ත්‍රික ධර්මතාවයන් අප විසින් නිතරම ආදරයෙන් යුතුව රැකබලාගෙන ඇති අතර ඒවා අනුගමනය කර ඇත. මේවා මූලික අයිතිවාසිකම් හැටියට අපේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවෙහි අප විසින් ප්‍රකාශ කර ඇති අතර ඒවා පිළිබඳව අධිකරණය ඉදිරියට යාමට හැකිවන සේ විධිවිධාන සලසා තිබේ. එහෙත් ස්වාධීන සමාජයක් විසින් ලබා දී ඇති අවස්ථාවන් උපයෝගී කර ගනිමින් එකී නිදහස වනසා ලීමට "ත්‍රස්තවාදීන්" යත්න දරන හෙයින් එම නිදහස සීමා කෙරෙන ඇතැම් තහංචි පැනවීමට අපට සිදුවී ඇත.

අපේ රටෙහි අප සැලකිලිමත්වී ඇත්තේ ප්‍රජාතාන්ත්‍රික විධි පිළිබඳව විනා බහුතරයක් විසින් පිළිගනු ලබන ප්‍රජාතන්ත්‍රවාදයම පිළිබඳව නොවේ. විටින් විට පිහිටුවනු ලැබූ රජයන් විසින් අපේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව සංශෝධනය කර තිබේ. එහෙත් ඒ සෑම අවස්ථාවක ම ප්‍රජාතාන්ත්‍රික ප්‍රතිපත්තීන් එම ව්‍යවස්ථාවන්හි ආරක්ෂා කර ඇත. මුළු මහත් ජාතිය විසින් අවුරුදු 6 කට වරක් පත් කර ගනු ලබන ජනාධිපතිවරයා අද විධායක බලධරයා වන අතර ඔහු ව්‍යවස්ථාදායකයෙන් තෝරාගත් අමාත්‍ය මණ්ඩලයක් සමග එම බලය ක්‍රියාත්මක කරයි. දියුණුවන රටකට ඉතාමත් අවශ්‍ය වන ශක්තිමත් හා ස්ථිර විධායකයක් ඇති කිරීමට අපි ප්‍රයත්න දරා ඇත්තෙමු. සාවුරුදු කාලයක් සඳහා මහජනතාවගේ ඡන්දයෙන් තෝරාගනු

ලබන මන්ත්‍රී වරුන්ගෙන් යුත්, ස්වාධිපත්‍යය ඇති ව්‍යවස්ථාදායකයක් මගින් නීති පනවනු ලබයි. එම නීති අර්ථ නිරූපණය කරනු ලබන්නේ ස්වාධීන අධිකරණයක් විසිනි.

ජනාධිපති ධුරය, ව්‍යවස්ථාදායකය සහ අධිකරණය විසින් ක්‍රියාත්මක කරනු ලබන බලතල දැනාත්විත ලෙසත් වැඩි දෙනාගේ සුබසිද්ධිය උදෙසාත් අනාගත පරම්පරාවන් විසින් උපයෝගී කරගනු ඇතැයි ප්‍රාර්ථනා කරමි.

අප හා දියුණුවන ජාතීන් ස්වල්ප සංඛ්‍යාවක් ප්‍රජාතන්ත්‍ර විධි වැදගත් සේ සලකන අතර වඩ වඩා ජාතීන් සංඛ්‍යාවක් කලින් ප්‍රජාතන්ත්‍රවාදය භුක්ති විඳ නොමැති බැවින් ප්‍රජාතන්ත්‍රවාදයේ හරය වැදගත් සේ සලකති. එම ජාතීහු දැන් ප්‍රජාතන්ත්‍රවාදය කෙරෙහි නැඹුරු වෙමින් සිටිති.

ආර්ජන්ටිනාව, උරුගුවේ, බ්‍රසීලය සහ තුර්කිය මේ පිළිබඳව විශ්මය දනවන උදාහරණ සේ දැක්විය හැක. කොලොම්බියාව, ජැමෙයිකාව සහ නයිජීරියාවෙහි තත්ත්වය ඊට වඩා අඩුවෙන් විශ්මය දනවයි. එල්සැල්වදෝරයත් තවත් උදහරණයක් වනු ඇතැයි දක්නට ඇත. පෘතුගාලය, ස්පාඤ්ඤය සහ ග්‍රීසිය ප්‍රජාතන්ත්‍රවාදී ආයතන පිහිටුවීමට මීට අවුරුදු කිහිපයකට පෙර පියවර ගත්හ. ජනගහනය අතින් ලෝකයෙහි දෙවැනි තැන ගන්නා ඉන්දියාව ප්‍රජාතන්ත්‍රවාදයේ බලය පිළිබඳව මෑතදී නැවත අවධාරණය කර ඇත. මා පසුගිය සතියේ සංචාරය කළ පකිස්තානය තවතම උදහරණයයි. මම එම රටට සුබ ප්‍රාර්ථනය කරමි. ප්‍රජාතන්ත්‍රවාදයේ අගය දන්නා අප එය රැක ගැනීමට එම රටට ආධාර කළ යුතුයි.

ත්‍රස්තවාදයේ තර්ජනය සමාජයේ ප්‍රජාතන්ත්‍රවාදී රටාවට එල්ලවී ඇති අතර එය එම රටාව සුණුවිසුණු කර දැමීමට යත්න දරයි. මෙම අතතුර මුලිනුපුටා දැමීමට ප්‍රජාතන්ත්‍රවාදී ලෝකයේ සිටින අපි අපේ උත්සාහයන් සම්බන්ධීකරණය කළ

යුතුයි. මේ පිළිබඳව වෙනත් විකල්පයක් නොමැත. ත්‍රස්තවාදී ප්‍රචණ්ඩ ක්‍රියාවලට එරෙහිව කටයුතු කිරීම අප ප්‍රමාද කළහොත් එය ඔවුන්ගේ ව්‍යාපාරය වර්ධනය කිරීමටත් අපේ ප්‍රජාතන්ත්‍රවාදී ක්‍රමය විනාශ කිරීමටත් මෙම දුෂ්ඨ බලවේගයන් ධෛර්යයමත් කිරීමට ඉවහල් වෙනවා ඇත.

ලංකාවෙහි ඇත්තේ "ත්‍රස්තවාදී ප්‍රශ්නයක්" විනා "ජනවාර්ගික ප්‍රශ්නයක්" නොවන බැව් මා නැවත නැවතත් ප්‍රකාශ කර ඇත. 1977 දී මගේ පක්ෂය විසින් ජනතාවට ඉදිරිපත් කරන ලද මැතිවරණ ප්‍රකාශනයෙහි "දෙමළ කථා කරන ජනතාවගේ ප්‍රශ්න" යන විෂයය යටතේ සඳහන් වූ පහත සඳහන් පාඨය ඔබේ මතකයට නංවන්නට මම කැමති වෙමි :

"දෙමළ කථා කරන ජනතාවට විවිධ ප්‍රශ්නවලට මුහුණ දීමට ඇති බව එක්සත් ජාතික පක්ෂය පිළිගනී.

බලයට පත්වූ විට—

(1) අධ්‍යාපනය

(2) ජනපද ව්‍යාපාර

(3) දෙමළ භාෂාව භාවිතා කිරීම

(4) රජයේ හා සංස්ථාවල යෝජිත රැකීරක්ෂා ලබාදීම

වැනි ක්ෂේත්‍රයන්හි ඇතිවන දුක්ගැනවිලි නිරාකරණය කිරීම සඳහා සුදුසු සෑම පියවරක්ම ගනු ලැබේ."

අපි පාර්ලිමේන්තුවේ සියලුම මන්ත්‍රීවරුන්ගෙන් යුත් තේරීම් කාරක සභාවක් ඉහත සඳහන් යෝජනා සහ වෙනත් ඒවා සලකා බැලීමට පත් කළෙමු.

මෙම කාරක සභාවේ නිර්දේශයන් 1977 සිට රජය විසින් ක්‍රියාත්මක කර තිබේ. දෙමළ භාෂාව ජාතික භාෂාවක් හැටියට ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවෙහි ප්‍රකාශ කරන ලදී. විශ්ව විද්‍යාල

ප්‍රවේශය පිළිබඳ රෙගුලාසි සංශෝධනය කළ අතර ඒවායින් යම් ජාතියකට අවාසිවන ආකාරයේ විධිවිධාන තිබුනේ නම් ඒවා ඉවත් කර ඇත. රාජ්‍ය සේවයට ඇතුළත්වීම සහ සේවයේ උසස්වීම්වලට අදාළ විවිධ ජාතීන්ට අහිතකර ලෙස බලපාන විධිවිධාන ද ඉවත් කර ඇත.

දිස්ත්‍රික් සභා පිහිටුවන ලද අතර දිසා ඇමතිවරුන් පත් කරනු ලැබූහ. දිස්ත්‍රික් සභා සඳහා මැතිවරණ පැවැත්වින. මෙම මැතිවරණවල දී යාපනය ප්‍රදේශයේ අප පක්ෂයෙන් ඉදිරිපත් කරන ලද අපේක්ෂකයන් හා ඇතැම් පොලිස් නිලධාරීන් ද ඝාතනය කරන ලදී. එම ඝාතනය යාපනය ප්‍රදේශයෙහි කලකෝලාහල ඇතිවීමට හේතු විය. අවිගත් කණ්ඩායම් රැස්වීම් කඩාකප්පල් කළහ. ඡන්ද පොළවල් කඩාබිඳ දැමූහ.

උතුරේ සන්නද්ධ හමුදා නිලධාරීන් ත්‍රස්තවාදීන් විසින් මරාදැමීමේ ප්‍රතිඵලය වූයේ විශේෂයෙන්ම කොළඹ සහ මහනුවර 1983 දී ඇති වූ කෝලාහල යි. වෙනම ඊලම් රාජ්‍යයක් පිහිටුවීම පමණක් නොව ඡන්දයෙන් තෝරාගත් ප්‍රජාතන්ත්‍රවාදී රජය සමස්ත ලංකාවේම පෙරළා දැමීමට බලාපොරොත්තු වන බව ත්‍රස්තවාදීහු පවසති. ඉන්දියානු ප්‍රවෘත්ති පත්‍රවල පළවන ප්‍රකාශවල ඔවුන් ප්‍රසිද්ධියේම එය පවසා ඇත. ප්‍රවෘත්ති පත්‍ර ලේඛකයින් ඔවුන් හා සම්මුඛ සාකච්ඡා පවත්වන අතර ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණේ සාමාජිකයින් සහ වෙනත් ඉන්දියානු නායකයින් සමග වේදිකාවල පෙනී සිටිමින් ඔවුන් තමිල්නාඩුවෙහි සහ ඉන්දියාවෙහි අනෙකුත් ප්‍රදේශවල නිදහසේ හැසිරෙති. ඒ අතරම සියලුම වර්ගවලට, ආගම්වලට සහ කුලවලට අයත් ශ්‍රී ලංකාවේ ස්ත්‍රී පුරුෂ දෙපාර්ශ්වයේම යම් යම් අය මරා දමන ලද බැව් ඔවුහු ප්‍රසිද්ධියේම පිළිගනිති.

කෙනෙකුගේ මිතුරන් තමන් විසින් මරා දමන ලද බැව් ප්‍රසිද්ධියේ පිළිගන්නා හෝ තව තවත් අපරාධවලට භාජනය කිරීමට සැලසුම් කරන්නා වූ හෝ අපරාධකරුවන් සමග ඇසුරු කිරීමට මනුෂ්‍යයෙකුට හෝ ජනතාවකට ඉඩකඩ ඇති

මිත්‍රත්වයේ ස්වභාවය කුමක් ද ? ජාතීන් හෝ වේවා පුද්ගලයින් හෝ වේවා මගේ මිතුරන් කෙරෙහි මා අනුගමනය කරන්නේ මීට වඩා වෙනස් ආකල්පයකි.

පසුගිය අවුරුදු 100 ඇතුළත යුද්ධ කිහිපයක දී ඔබේ ජනතාවගෙන් ලක්ෂ සංඛ්‍යාත ගණනක් මරණයට ගොදුරු වූහ. එහෙත් අප එවැන්නක් විඳ නැත. එහෙත් අපේ සමහර පුරවැසියන් ඔබ ජනතාව සමග උරෙන් උර ගැටී එම යුද්ධවලදී සටන් කළ අතර 1940 ගණන්වල දී ගුවන් ආක්‍රමණ හා යුද්ධයේ වෙනත් විපාකවලට ලක්වූහ. බ්‍රිතාන්‍ය අධිරාජ්‍යයේ රැකවරණ නිසා ඔබට මෙන් අපට ජීවිත සහ දේපළ නැතිවූයේ නැත.

ප්‍රචණ්ඩ ක්‍රියාවලට මම විරුද්ධ වෙමි. ඒ බැව් ඔබ ද සහභාගී වූ ඉන්දියානු අගමැති ගාන්ධි මැතිනියගේ ප්‍රධානත්වයෙන් 1983 නොවැම්බර් මස දිල්ලියේ දී පවත්වන ලද පොදුරාජ්‍ය මණ්ඩල සම්මේලනයේ දී ප්‍රකාශ කෙළෙමි. " ගෝව ප්‍රකාශය " මගේ අදහස පිළිගත් අතර අවිහිංසාව පිළිබඳව එහි සඳහන් විය.

අපේ දිවයිනේ උතුරෙහි සහ නැගෙනහිර සමහර ප්‍රදේශවල අපි යුද්ධයකට මුහුණ දී සිටිමු. සති දෙකකට පෙර එක් බෝම්බයකින් නැගෙනහිර පළාතේ පොලිස් භටයන් නව දෙනෙක් මරුමුවට පත්වූහ. ඔවුන් මනුෂ්‍යයන් නොවේ ද ? ඔවුන්ට දෙමාපියන්, බිරින්දන් සහ දරුවන් නොමැත්තේ ද ? මානුෂික මිත්‍රත්වයේ උණුසුම ඔවුනට නොදැනෙන්නේ ද ? සුණුවිසුණු වී ගිය ඔවුන්ගේ අත් ස්පර්ශ කිරීමටත් නිහඬ වී ඇති ඔවුන්ගේ කටහඬ ඇසීමටත් ඔවුන්ගෙන් යැපෙන්නෝ මහත් ආශාවෙන් නොසිටිත් ද ?

" මට යුද්ධය අවශ්‍ය ද ? සත්තකින්ම නැත. මට අවශ්‍ය ජයග්‍රහණය යි " යනුවෙන් බිස්මාර්ක් පැවසූ බැව් ඔබ ඇමෙරිකානු ව්‍යවස්ථාදායකයේ සාමාජිකයින්ට පැවසූවෙහි ය.

අගමැතිතියනි, මට අවශ්‍ය " සාමයයි, අවිහිංසාවයි. "

ප්‍රජාතන්ත්‍රවාදය රැකගනු සඳහා මධ්‍යම ඇමෙරිකාවේ සමහර කොටස්වල ඔබේ රට විසින් යුද්ධ සේනාංක රඳවා තිබේ. සයිප්‍රස්හි, දකුණු අත්ලාන්තික් ප්‍රදේශයෙහි, සීනායිහි, බීරුට්හි ඔබේ සේනාංකයෝ වෙති. විදේශ රටවල් 35 කට ඔබ විසින් සේනාංක ලබා දී ඇත. අත්ලාන්තික් සාගරයෙහි සහ ඉන්දියානු සාගරයෙහි ඔබේ නාවික හමුදාව සේවයෙහි යෙදී සිටියි. ඔබ ඇමෙරිකන් ජනතාවට පහත සඳහන් අන්දමට පැවසුවෙහි ය :

" මනුෂ්‍ය වර්ගයා පිළිබඳ කරුණුවලදී අවසන් විනිසකරු විය යුත්තේ බලය යැයි අපි විශ්වාස නොකරමු. "

" ලොව පුරා නිදහස රැක ගැනීමේ වගකීම බ්‍රිතාන්‍ය විසින් ඉටු කරනු ලැබේ. ඉදිරියට ද එසේ වනු ඇත. "

මැතිතියනි, මම ඔබට ආචාර කරමි.

අයර්ලන්තයේ පවත්නා ත්‍රස්තවාදය ගැන ඔබ සඳහන් කෙළෙහිය. එය " නිදහසට මෙල්ච්ඡ වූත් ගුප්ත වූත් තර්ජනයක් " බව ඔබ පැවසුවෙහිය. එය කොතරම් සත්‍ය ද, අපේ මාහැඟිවූත් තරුණවූත් ජීවිත කිහිපයක් අපට ද නැතිවිය.

අහිංසකයේ මතුපිටින් පෙනෙන කණ්ඩායමවලට මුදල් ආධාර දීමට ඔබේ රටවැසියන් මුලා කරනු ලැබේ. ශ්‍රී ලාංකිකයින්ට හිංසා කිරීම සහ ඔවුන් මරා දැමීම සඳහා මත් ද්‍රව්‍ය සහ ආයුධ මිලට ගැනීමට එම මුදල් යොදවනු ලබයි.

අපේ මව්බිමෙහි ප්‍රජාතන්ත්‍රවාදයේ අනාගතය අනතුරට මුහුණ පා ඇත. ඝාතකයින්ගේ තුවක්කුවලට හෝ බියගුල්ලන්ගේ බෝම්බවලට අපි යටත් නොවෙමු. අපට

එරෙහිව එවැනි දුෂ්ට බලවේගයන් කොපමණ පැමිණියත් නිදහස් ප්‍රජාතාන්ත්‍රික එක්සත් ශ්‍රී ලංකාවක් පවත්වා ගැනීම සඳහා අපි ක්‍රියා කරන්නෙමු.

නිදහසේ සහ ප්‍රජාතන්ත්‍රවාදයේ නිවහන වූ එක්සත් රාජධානිය වෙත මහ සයුර හරහා, මා ප්‍රකාශ කළ මේ වචන රැගෙන යනු ඇතැයි මම විශ්වාස කරමි.

*அதிகௌரவ பிரதம மந்திரி அவர்களே!*
*திரு. தட்சர் அவர்களே! மேன்மை தங்கியவர்களே, பெருமக்களே!*

நீங்கள் எனது அழைப்பை ஏற்று எங்கள் நாட்டுக்கு விஜயஞ் செய்தமையிட்டு நானும் எனது அரசாங்கமும் எம் மக்களுட் பெரும் பாலோரும் மகிழ்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் உண்டு.

பிரதம மந்திரி அவர்களே! எமது இரு நாடுகளுக்குமிடையே நிலவுகின்ற பிணைப்புக்கள் இரு நூற்றுண்டுகளுக்கு மேற்பட்ட இணைப் புக்களால் உருவாக்கப்பட்டவை. அவை 1796 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியவையாகும். இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முன்னர் ஒல்லாந்தர் வசமிருந்த இடங்களைப் பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கையேற்பதற்குத் தீர்மானித்த நாள் முதல் இப்பிணைப்புக் கள் உருவாகத் தொடங்கின. அப்பொழுதிருந்து எமது இரு நாடுகளின தும் ஊழ்விதிகள் விடுவிக்கப்பட முடியாமல் பின்னிப்பிணைந்துள்ளன.

எனவே, இன்று இலங்கை வாழ்விற் காணப்படும் பல அமிசங்கள் இந்த இணைப்பின்போது உருவமைத்த வார்ப்புக்களிலிருந்து வெளிப் பட்டவையாகும். இவற்றுளெல்லாம் தலையாயது, நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் நமது சனநாயகப் பாரம்பரியமாகும்.

1833 இல் நடுவர் மூலம் வழக்கு விசாரணை செய்யும் முறை நிறுவப்பட்டது. 1866 இல் மக்களாலே தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் களைக் கொண்டு, கொழும்பு, கண்டி, காலி மாநகரசபைகள் அமைக்கப்பட்

டன. இவ்வாறன அமைப்புக்களுள் இவையே ஆசியாவில் முதலானவையாம். 1931 இல் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து பொறுக்கியெடுத்த அமைச்சர்களைக் கொண்டு அரசாங்க சபை உருவாக்கப்பட்டு, 1947 வரை அதாவது நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் வரை செயற்பட்டது. முன்னாட் பிரதம மந்திரிகளுள் ஒருவரான திரு. தகநாயக்க பா. உ. அவர்களும் நானுமே அந்தச் சபையில் அங்கத்துவம் வகித்து இன்று உயிரோடிருக்கின்ற இருவர் ஆவோம்.

வாக்குச்சீட்டு மூலம் நம் தலைவர்களை நாம் தேர்ந்தெடுக்கின்றோம். 1931 முதல் இந்த நாட்டில் 10 பொதுத் தேர்தல்களும் ஒரு மக்கள் தீர்ப்பும் இடம் பெற்றுள்ளன. இந்த மக்கள் தீர்ப்பின்போது பொதுமக்கள் 53% வாக்களிப்பு மூலம் பொதுத்தேர்தலை 1989 வரை தள்ளிப்போடுவதற்குத் தீர்மானித்தனர். ஒரு பொதுத் தேர்தலையோ அன்றி ஒரு ஜனாதிபதித் தேர்தலையோ பாராளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தினாலுமே பிற்போட முடியாது. அரசாங்கங்கள் பல தடவைகளில் ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன; ஆட்சியிலிருந்து தோற்கடிக்கப்பட்டுமுள்ளன. இன்று உயிரோடிருக்கின்ற ஒரு சில சனநாயகத் தலைவர்களே உரிமைபாராட்டக்கூடியதாக இருப்பது போன்று, இந்தத் தேர்தற் போராட்டங்களில் ஏற்பட்ட தழும்புகளை நானும் தழுவியுள்ளேன்.

25 நூற்றுண்டுக்கால எமது பௌத்த பாரம்பரியங்கள் மாற்றத்தின் ஒரு பொறிமுறையாக வன்செயல்களைக் கைவிடுவதற்கான எமது உறுதியை மீளவலியுறுத்தியுள்ளன. ஆளப்படுகிறவர்களின் சம்மதத்தோடு ஆட்சி செய்யும் செய்முறையானது நெடுங்காலமாக நிறுவப்பட்டுள்ள எமது மக்களின் வழிநடத்தும் மெய்யியல் சார்ந்த பாரம்பரியங்களுடனும் முற்றாக ஏற்புடைத்த தொன்றாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையிலே கீழ்மட்ட நிலைகளில் சனநாயக அமைப்புக்கள் செழித்திருந்தன என்பதனையிட்டு நாம் நியாயமாகப் பெருமைப்படுகின்றோம். புத்தபெருமான் வாழ்ந்தும் போதித்தும் வந்த இந்திய கங்கை நதிச் சமவெளியிலுள்ள மாநிலங்களிலிருந்த மக்கள் சிலரிடையே கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரியங்களைப் பின்பற்றி இச்சனநாயக அமைப்புக்கள் இங்கு எழுந்தனவாகும். எச். ஜி. வெல்ஸ், வரலாற்றின் இக் காலத்தை மனித இனத்தின் கட்டிளமைப்பருவம் என அழைக்கின்றார். ஏனெனில், மேனாட்டிலே சோக்கிரட்டீஸ், அரிஸ்டோட்டில்,

பிளேட்டோ ஆகியோரும் அவர்தம் சமகாலத்தவர்களும், பெர்சியாவிலே ஸோரூஸ்ட்டரும், இந்தியாவிலே கௌதம புத்தரும், சீனுவிலே கொன்பூசியசும் வாழ்ந்து, பௌதிகம், மெய்யியல் என்பன பற்றிய நவீன எண்ணக்கருத்துக்களைப் போதித்து வந்திருந்தனர்.

சனநாயகத்தின் நிலையான கருத்துக்களாகிய தனிமனித சுதந்திரம், ஆட்கொணர்வு கட்டளை, பேசுதற்கும் ஒன்று கூடுதற்குமான சுதந்திரம், வாக்களிக்கும் உரிமை முதலானவற்றை நாம் எப்போதுமே போற்றிப் பின்பற்றி வந்துள்ளோம். நாம் இவற்றை எமது அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் என்று பிரகடனஞ்செய்துள்ளதுடன், நீதிமன்ற ஆட்சிக்கு இவற்றை உட்பட்டதாக்கியும் இருக்கின்ருேம். இவ்வாறிருந்தும், இச்சுதந்திரங்களைச் செயற்படுத்துவதில் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இன்று நாம் உட்பட்டுள்ளோம். ஒரு சுதந்திர சமுதாயம் வழங்கியுள்ள வாய்ப்புகளைத் தன்னயத்திற்காகப் பயன்படுத்தி இச்சுதந்திரங்களை அழிப்பதில் "பயங்கரவாதிகள்" ஈடுபட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

நாங்கள் எமது நாட்டில் சனநாயகத்தின் அமைப்புக்களைப் பற்றி அக்கறை கொண்டுள்ளோமேயன்றி, பெரும்பாலார் ஏற்றுக்கொள்கின்ற சனநாயகத்தைப் பற்றியன்று, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எமது அரசியல் யாப்பைக் காலத்திற்குக்காலம் திருத்தியமைத்துள்ளன; எனினும் அதன் சனநாயகத் தத்துவங்கள் ஒருபோதும் கைவிடப்படவில்லை. முழு நாடும் 6 வருடங்களுக்கு ஒருமுறை தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களையுடையவராக இன்று ஜனுதிபதி இருக்கின்ருர். இவ்வதிகாரத்தை அவர் சட்டசபையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அமைச்சரவையுடன் செயற்படுத்துகின்ருர். அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாட்டுக்கு மிகத் தேவையான உறுதியுள்ள நிலைபேருன நிருவாக அமைப்பொன்றை உருவாக்குவதற்கு நாங்கள் முயன்றுள்ளோம். 6 வருடங்களுக்குத் தொழிற்படும் இறைமையுடைய சட்டசபையிலே தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சட்டங்களை ஆக்குகின்ருர்கள். சுதந்திரமான நீதித்துறை அச்சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் கொடுக்கின்றன.

ஜனுதிபதிமுறை, சட்டசபை, நீதித்துறை ஆகியவற்றின் வாயிலாகச் செய்யப்படும் இவ்வதிகாரங்களை வருங்காலத் தலைமுறையினர் பலரின் நன்மை கருதிப் பயன்படுத்துவர் என நம்புகின்றேன்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையே நாங்களும் மற்றுஞ் சில நாடுகளும் சனநாயக அமைப்புக்களை முக்கியத்துவமுடையனவாகக் கொண்டிருப்ப, இவற்றை முன்னர் அனுபவிக்காதிருந்த ஒரு தொகை நாடுகள் சனநாயகத்தின் சாரத்தையே முக்கியத்துவமுடையதாகக் கருதிவந்திருந்து. இப்போது சனநாயக அமைப்புக்களிற் கவனஞ் செலுத்தத் தொடங்கியுள்ளன.

ஆர்ஜெந்தீனு, உருகுவே, பிரேசில், துருக்கி என்பன உணர்ச்சியைத் தூண்டும் உதாரணங்களாகும். கொலம்பியா, ஜமெய்க்கா, நைஜீரியா என்பன ஓரளவுக்கு உயர்ச்சியைத் தூண்டும் எடுத்துக்காட்டுக்களாகும். எல்சல்வதோர் தானும் ஓர் உதாரணமாக இருக்கலாம் எனத் தோற்ற மளிக்கின்றது. போர்த்துக்கல், ஸ்பெயின், கிரீஸ் என்பன சில ஆண்டு களுக்கு முன்னர் சனநாயகத் தாபனங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை களை மேற்கொண்டன. உலகிலே இரண்டாவதாக அதிக சனத்தொகை யைக் கொண்டுள்ள நாடான இந்தியா அண்மையில் சனநாயகத்தின் பலத்தை வலியுறுத்திக் காட்டியுள்ளது. சென்ற கிழமை நான் விஜயம் செய்த நாடான பாக்கிஸ்தான் இந்த அம்சத்தில் கடைசியான உதாரணமாகும். நான் அந்த நாடு நலம்பெற விழைகின்றேன். சனநாயகத்தின் பெருமதிப்பை அறிந்துள்ள நாம், அந்நாடு சனநாயகத் தாபனங்களைப் பேணிக்காப்பதற்கு உதவ வேண்டும்.

பயங்கரவாத அச்சுறுத்தல் சமுதாயத்தின் சனநாயக அமைப்பைத் துண்டாக்கும் நோக்கமுடைய ஒரு பேராபத்தாகும். இந்தப் பேரிடை அழித்தொழிப்பதற்காக சனநாயக உலகத்தைச் சேர்ந்த நாங்கள் நமது தந்திரோபாயங்களை இயைப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இதற்கு மாற்று வழியில்லை. பயங்கரவாத வன்செயல்களை முறியடிப்பதற்கு நாம் தாமதஞ்செய்வதால், இந்தத் தீய சக்திகள் தங்களுடைய இயக்கத்தை முடுக்கி விடுவதற்கும், நமது சனநாயக முறைமையைக் கவிழ்த்து விடுவதற்கும் ஊக்கம் பெறும்.

இலங்கையில் "இனப்பிரச்சினை" இல்லை, "பயங்கரவாதப் பிரச் சினையே" இருக்கின்றது. நான் மீண்டும் மீண்டும் கூறியுள்ளேன். 1977 இல் தேர்தற்றெகுதிகளுக்கு விடுத்த எனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபத்தில் "தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள்" பின்வருமாறு கூறப்பட்டுள்ளதை நினைவுபடுத்துகின்றேன்:

ஐக்கிய தேசியக் கட்சியானது தமிழ்ப் பேசும் மக்களை எண்ணற்ற பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றன என்னும் நிலையை ஏற்றுக்கொள் கின்றது. கட்சி ஆட்சிக்கு வரும்போது பின்வரும் துறைகளில் அவர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இயலுமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் :

1. கல்வி ;
2. குடியேற்றம் ;
3. தமிழ்மொழிப் பிரயோகம் ;
4. அரசாங்க, அரசாங்கம் மருவிய கூட்டுத்தாபனங்களில் வேலை வாய்ப்பு.

மேலுள்ள பிரேரணைகளையும் மற்றவைகளையும் கவனத்திற்கெடுப் பதற்காக, பாராளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளினதும் உறுப் பினர்களைக்கொண்ட ஒரு தெரிவுக்குழுவை நாம் நியமித்தோம்.

1977 முதல் அரசாங்கம் இந்தக் குழுவின் விதந்துரைகளை அமுலாக்கியுள்ளது. அரசியல் யாப்பிலே தமிழ் ஒரு தேசிய மொழியாக ஆக்கப்பட்டது, பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல் தொடர்பான விதிகள் திருத்தப்பட்டன ; இவ்விதிகள் தொடர்பான இன பாரபட்சங் காட்டும் முறை நீக்கப்பட்டது. அரசாங்க சேவைகளிற் சேர்வதும், அச்சேவைகளிற் பதவியேற்றம் பெறுவதும் தொடர்பாக இன அடிப் படையில் பாரபட்சம் காட்டுவதான பிரமாணங்களும் நீக்கப்பட்டன.

மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டு, மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். தேர்தல்கள் நடைபெற்றன ; எங்கள் அபேட்சகர் கள் கொலை செய்யப்பட்டனர் ; இவ்வாறே பொலிஸ் துறையிலுள்ள உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். இதனால் யாழ்ப்பாணத்தில் கலகம் விளைந்தது. கூட்டங்களும் வாக்குச் சாவடிகளும் ஆயுதந்தரித்த கும்பல்களால் கலைக்கப்பட்டு, தகர்க்கப்பட்டன.

பெரும்பாலும் கொழும்பிலும் கண்டியிலும் 1983 யூலையில் ஏற்பட்ட கலவரங்கள் வடபகுதியில் ஆயுதப்படையிலுள்ள உறுப்பினர்களைப் பயங்கரவாதிகள் கொலை செய்தமையின் உச்சக்கட்ட விளைவாகும். தனியான ஈழநாட்டை உருவாக்குவது மட்டுமன்றி, இலங்கை முழுவதி லுள்ள தெரிவுசெய்யப்பட்ட சனநாயக அரசாங்கத்தை மாற்றியமைக்க வும் தாங்கள் முயற்சிசெய்தவதாகப் பயங்கரவாதிகள் கூறுகிறார்கள்.

இந்தியப் பத்திரிகைகளில் அவர்கள் இவ்வாறு வெளிப்படையாகவே அறிக்கையிடுகிருர்கள் ; இவர்கள் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்கிருர்கள் ; தமிழ்நாட்டிலும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் சுதந்திரமாக உலாவுகிருர்கள். த. ஐ. வி. மு. உறுப்பினர்களுடனும் ஏனைய இந்தியத் தலைவர்களுடனும் இவர்கள் மேடைகளில் தோன்று கிருர்கள். அதே வேளையில் இலங்கையிலுள்ள அனைத்து இனங்களையும் மதங்களையும் சாதிகளையும் பால்களையும் சார்ந்த குடிமக்களைக் கொலை செய்துவருவதாக இவர்கள் வெளிப்படையாக ஒத்துக் கொள்கிருர்கள்.

நண்பர்களைக் கொலை செய்வதையும் அவர்களிடையே மற்றும் பல குற்றச்செயல்களைப் புரிவதற்குத் திட்டமிட்டுள்ளதையும் வெளிப்படை யாக ஒத்துக் கொள்ளும் குற்றவாளிகளுடன் ஒரு தனிமனிதனை அல்லது மக்களைக்கூட்டுச் சேர்வதற்கு அனுமதிக்கின்ற நட்பின் இயல்பு எத்தகை யது, நான் என் நண்பர்களுடன், அவர்கள் நாடுகளாயினுஞ்சரி அல்லது தனிமனிதர்களாயினுஞ்சரி, வித்தியாசமான போக்கினைக் கடைப்பிடிக் கின்றேன்.

உங்களுடைய நாடும் நாட்டு மக்களும் கடந்த 100 ஆண்டுகளில் நடைபெற்ற பற்பல போர்களின்போது பல்லாயிரக்கணக்காஞேர் மரண மடைந்ததையிட்டுத் துயரடைந்துள்ளனர். எங்களுக்கு அவ்வாறு நடக்க வில்லை. எங்களுடைய குடிமக்களுட் சிலர் இந்தப் போர்களின்போது உங்கள் நாட்டினருடன் பக்கம் பக்கமாக நின்று போரிட்டும், விமானத் தாக்குதல்களால் துன்பமடைந்தும், 1940 ஆந் தொடர் ஆண்டுகளிலே போரினுல் உண்டான ஏனைய விளைவுகளால் பாதிக்கப்பட்டும் இருந்தனர். உங்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்களும் சொத்து இழப்புக்களும் பிரித்தானிய பேரரசு வழங்கிய பாதுகாப்பு காரணமாக எங்களுக்கு நேரிடவில்லை.

நான் வன்செயல்களுக்கு எதிரானவன். பிரதம மந்திரியாகிய நீங்கள் சமூகமளித்திருந்த, 1983, நவம்பர் மாதம் டில்லியில் இந்தியப் பிரதம மந்திரி திருமதி காந்தி தலைமையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டிலே நான் இவ்வாறு கூறினேன். கோவைப் பிரகடனம் எனது கருத்தை ஏற்றுக் கொண்டு, அகிம்சையைச் சேர்த்துக் கொண்டது.

எமது நாட்டின். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலுள்ள சில பகுதிகளில் நாங்கள் போரிட்டுக் கொண்டிருக்கிருேம். இரு வாரங்களுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் ஒன்பது பொலிஸ்காரர்கள் ஒரு குண்டுக்கு

இரையாளர்கள். அவர்கள் மனிதரில்லையா ? அவர்களுக்குப் பெற்றோர்களும், மனைவிகளும், குழந்தைகளும் இல்லையா ? மனித நட்பின் அரவணைப்பை அவர்கள் உணருவதில்லையா ? அவர்களிலே தங்கியுள்ளவர்கள் இறந்துபட்ட தம்மவர்களின் உடலைத் தீண்டவும், குரலைக் கேட்கவும் விரும்பமாட்டார்களா ? நான் விரும்புவது போரா ? நிச்சயமாக இல்லை ; நான் வெற்றியையே விரும்புகிறேன் என்று பிஸ்மார்க் கூறியதாக நீங்கள் அமெரிக்க சட்டசபையினருக்கு மேற்கோள் எடுத்துக் காட்டினீர்கள். பிரதம மந்திரியவர்களே, நாம் விரும்புவது "சமாதானம் அகிம்சை" என்பதே.

சனநாயகத்தைக் காப்பதற்காக மத்திய அமெரிக்காவின் சில பகுதிகளில் உங்கள் நாடு படைகளை வைத்திருக்கின்றது. சைப்பிரஸ், தெற்கு அத்துலாந்திக், சீனாய், பெய்ரூத் ஆகிய விடங்களில் நீங்கள் படைகளை வைத்திருக்கிறீர்கள். 35 வெளிநாடுகளுக்கு நீங்கள் சில படைகளைக் கொடுத்து உதவியிருக்கிறீர்கள். அத்துலாந்திக்கிலும் இந்து மகா சமுத்திரத்திலும், மற்றும் உலகின் பல பகுதிகளிலும் உங்களுடைய கடற்படை கடமையிலீடுபட்டுள்ளது. நீங்கள் அமெரிக்க மக்களுக்குப் பின்வருமாறு கூறினீர்கள் :

"மானிட விவகாரங்களில் வலிமையே
இறுதித் தீர்ப்பாளனாக இருக்கவேண்டும்
என்பதை நாம் நம்புவதில்லை"

"பிரித்தானியா உலகம் எங்கினும்
சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலே தனது
பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கிறது.
அஃது அவ்வாறே செய்து கொண்டிருக்கும்."

பிரதம மந்திரி அவர்களே, நான் உங்களுக்கு
வணக்கம் தெரிவிக்கின்றேன்.

அயர்லாந்திலுள்ள பயங்கரவாதம் பற்றியும் நீங்கள் தொட்டுக் காட்டினீர்கள். "சுதந்திரத்தை அச்சுறுத்தும் நாகரிகமற்ற நயவஞ்சகச் செயல்" என்று நீங்கள் அதனை அழைத்தீர்கள். அஃது எவ்வளவு உண்மையானது ! _ நாங்களும் சில சிறந்த இளம் உயிர்களை இழந்து விட்டோம்.

உங்கள் நாட்டுக்குடிமக்களும் பார்வைக்குச் சூதற்றதாகத் தோன்றும் குழுவினருக்குப் பங்களிப்புச் செய்வதற்கு தவருக வழிநடத்தப்பட்டுள்ள னர். இலங்கையருக்குத் தீங்கு விளைவிக்கவும் அவர்களைக் கொலை செய்யவும் போதைப்பொருள்களையும் ஆயுதங்களையும் வாங்குவதற்கு உங்கள் நாட்டினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

எங்கள் தாய்நாட்டில் சனநாயகத்தின் எதிர்காலம் ஆபத்திலிருக் கின்றது. கொலைகாரர்களின் குண்டுகளின் அல்லது கோழைகளின் வெடிகண்ணிகளின் அச்சுறுத்தல்களுக்கு நாம் சரணடைய மாட்டோம். எங்களுக்கு எதிரான எந்தத் தீயசக்திகளும் எதிர்க்கட்டும். சுதந்திரமான, சனநாயக முறையான, ஐக்கியப்பட்ட இலங்கையின் கீழ் நாங்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவோம்.

நான் இங்கு கூறிய செய்திகள் கடலைக்கடந்து, சுதந்திரத்தினதும் சனநாயகத்தினதும் தாயகமான ஐக்கிய இராச்சியத்தைச் சென்றடை யுமா ?

REFERENCE

රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව